
- மாத நாவல்கள் ஒழிய வேண்டும்!
- நன்றி மறந்த சிவாஜி கணேசன்
- "சோ பதில்கள்" -விமர்சனம்
- பம்மலில் ஒரு பாலிடெக்னிக்

67



மாத இதழ்
60 காசு
செப் '86

# சுடர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நமது பாஸ்பரஸ் மருத்துவம்

● பாஸ்பரஸ் மூளை செல்களில், அவுன்சிற்கு 100 மி.கிராம் வீதம் இருக்கிறது. இதன் விளைவாக உடலில் உள்ள சுரப்பிகள் சரியாக சுரக்கத் தூண்டுவது ,பாஸ்பரஸ் சத்தே. அது மட்டுமன்றி அதிகமாக சுரக்கும் அமிலத்தைச் சமப்படுத்தி, கொழுப்பும் மாவுப் பொருளும் சரியான விகிதத்தில் இருக்க பாஸ்பரஸ் காவல் காக்கிறது.

● பாஸ்பரஸ் சத்து உடலில் குறைந்தால்—

- ✷ எலும்புகள் பலவீனமாகும், விபத்து நேரும்போது எலும்பு முறிவுக்கான சாத்தியம் அதிகமாகும்.
- ✷ நுரையீரல் பலவீனமாகும். சுவாசநோய் வரும் வாய்ப்பு அதிகரிக்கும்.
- ✷ மூளைக்கும் தசைகளுக்கும் உள்ள தொடர்பு பலவீனமாகும். அதனால் நரம்பு மண்டல பாதிப்பு ஏற்படும். தசைகள் வலுவிழக்கும். தசை புதுப்பித்தல் நிகழாது. தசை சுளுக்கு ஏற்படும்.
- ✷ சிவப்பு அணுக்கள் குறைந்து போய், அதன் பற்றாக் குறை தொல்லைகள் எழும்.
- ✷ உடலில் தாக்குப்பிடிக்கும் சக்தி, வீரியம், இல்லாமல் போகும்.

● கால்சியமும், பாஸ்பரசும் தம்பதிகள். உடலில் 1 : 1.5 என்ற விகிதத்தில் அவை சேர்ந்து இருக்க வேண்டும். கால்சியம் 1, என்பது 6 ஆகி பாஸ்பரஸ் அளவு அதிகரிக்காவிட்டால் "ரிக்கெட்ஸ்" என்ற நோய் வரும், அதக மாமிசம் உண்போர் அதிக கால்சிய சத்து பெறுகிறார்கள். எனவே கூடவே நிறைய பாஸ்பரஸ் சத்தை அதற்கு இணையாகத் தேடி உண்ணாவிட்டால் பிரச்சனையாகும்.

● பாஸ்பரஸ் உணவு வகைகள் : புழுங்கலரிசி, பார்லி, முட்டைகோஸ், தேங்காய், சுண்டைக்காய் வற்றல், சிறிய பாகற்காய், பலாக்கொட்டை, முருங்கைக்காய், பட்டாணி, பூண்டு, பால், தேன், பழங்கள். நமது ஒரு நாளைய பாஸ்பரஸ் தேவை : 80 மி.கிராம்.

(அடுத்து நமது இரும்பு மருத்துவம்)

...சித்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,

## தொலைக்காட்சி விமர்சனம்

# சிவாஜிகணேசனின் மலரும் நினைவுகள்



15-08-86 தொலைக்காட்சியின் 10வது ஆண்டு விழா சிறப்பு நிகழ்ச்சி. நிரம்ப விளம்பரப்படுத்தப்பட்டிருந்த நடிகர் சிவாஜிகணேசனின் 'மலரும் நினைவுகள்' ஒலி ஒளிபரப்பானது அனைவரிடமும் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. தனது முப்பத்தைந்து வருட அனுபவங்களைப் பிழிந்து சாரமாகத் தந்திருக்க வேண்டாமா? பலத்த ஏமாற்றம்.

நடிகர் திலகம் ஒரு பல்கலைக்கழகம் என்பது தலைப்பு. நிகழ்ச்சியை வைத்து அளவிட்டால் திண்ணைப் பள்ளிக்கூடம் கூட இல்லை என்பது போலிருந்தது. சிவாஜிகணேசன் வலிந்து பலரைப் பாராட்டினார். வேண்டுமென்றே தவிர்க்க இயலாதவர்களையும் புறக்கணித்தார்.

பராசக்தியிலிருந்து ஒரு சீன் போடப்பட்டது. அதன் வசனகர்த்தாவும், சிவாஜியின் திரையுலகப் பிரவேசத்திற்குக் காரணமானவரானவரும் ஆகிய கருணாநிதி பற்றி ஒன்றும் கூறவில்லை. இது மன்னிக்க இயலா குற்றம். கூண்டுக் கிளியிலிருந்து ஒரு காட்சித் திரையிடப்பட்டது. ஆனால் எம்.ஜி.ஆர் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஏதேனும் கூறியிருக்கலாமே! அ.தி.மு.க காங்கிரஸ் உறவு இன்னும்தான் முறியவில்லையே!

தனது கட்சி சக எம்.பி.யான வைஜெயந்தி மாலாவின் பெயரைக் குறிப்பிட்டதோடு சரி. ஒன்றும் நினைவு கூற வில்லை. ஆனால் .. ஜெயலலிதாவைப் பற்றி ஆகாயமவளாப் புகழ்ந்துவிட்டு, அவரோடு நடித்த ஒரு பாடலும் திரையிடப் பட்டதே ஏன்? (அந்தப் பாடல் : வரவேண்டும் ஒரு மகராணி). இவர் ஏன் ஜெயலலிதாவை வரவேற்க வேண்டும்?

FREE E - BOOKS , www.thamizham.net.,

பல சிவாஜி படங்களுக்கு வெற்றிப் பின்னணியாக இருந்த T. M. சௌந்தரராஜன், விஸ்வநாதன், ராமமூர்த்தியை இவர் கண்டுகொள்ளவேயில்லை. இளையராஜாவுக்கோ புகழ் மாலைச் சூட்டப்பட்டது. பாரதிராஜாவுக்கு வெண்சாமரம் வீசப்பட்டது. கமலஹாசன் ஒரு நல்ல கேள்வி கேட்டார். அதற்கு சிவாஜியின் பதில்: மழுப்பல். சுஹாசினி வந்தார். புகழுகிறோம் என்ற நினைப்பில் உளறினார். நடிப்புத்தனமான சிரிப்பு. எரிச்சலை ஏற்படுத்தியது.

இப்படி பலப்பல அதிருப்திகள்.

இறுதியாக சிவாஜி இவ்வாறு கூறினார்:

"என் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். என் மனைவிக்கு சிறந்த கணவனாக, என் பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டிற்கு நல்ல ஒரு குடிமகனாக இருக்கிறேன்".

சிறந்த குடிமகனோ, திறந்த புத்தகமோ தெரியாது. சிவாஜி சுயநலமிக்க நல்ல குடும்பத்தலைவர். ஒத்துக்கொள்கிறோம்.

—வை. ஜெ. சூர்யா

---

மனிதன் மூக்கின்மேல் மூன்று எறும்புகள் சந்தித்துக் கொண்டன. முதல் எறும்பு சொல்லியது: "இந்த மலையும் சமவெளியும் மிகவும் வறண்டவை போலும். ஒரு தானிய மணியைக்கூட காணமுடியவில்லையே".

இரண்டாவது எறும்பு சொல்லியது: "நான்கூட எதையும் காணவில்லை. எதுவும் விளையாத சதுப்பு நிலமா இது'?

மூன்றாவது எறும்பு தலையை நீட்டிக் கொண்டு சொன்னது: "நண்பர்களே! நாம் இப்போது நின்று கொண்டு இருப்பது மகாசக்தி வாய்ந்த ராக்ஷச எறும்பின் மூக்கிலாகும். இதன் உருவத்தை நாம் காணமுடியாது. அவ்வளவு பிரம்மாண்டமானது. இதன் நிழலைத் தேடி காண இயலாது. அவ்வளவு விரிந்தது ... இது சர்வ வியாபியாகும்".

அப்பொழுது உறங்கிக் கொண்டிருந்த மனிதன் கையினால் மூக்கைத் தேய்த்தான். மூன்று எறும்புகளும் நசுங்கிச் செத்தன.

...கலீல் கிப்ரான் (தமிழில்: என். ஆர். தாசன்)

FREE E - BOOKS , www.thamizham.net.,



## நடைபாதைக்கு வந்த முதலை!

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் ஒரு தொழிற்சாலைக்கு பின்புறத்தில் உள்ள கார் நிறுத்துமிடப் பகுதியில் சுமார் 500 பவுண்டு எடையுள்ள முதலையொன்று மிகவும் சர்வசாதாரணமாக ஊர்ந்து சென்றது; இந்த தொழிற்சாலைக்குப் பக்கத்தில் ஒரு ஏரி இருக்கிறது அதை நோக்கித்தான் அந்த முதலை போய்க்கொண்டு இருக்கிறது; வழியில் போனவர்கள் ஒரு கணம் நின்று ரோட்டில் சாதாரணமாக போய்க்கொண்டிருந்த அந்த முதலையை ஆச்சரியத்துடன் பார்க்கத் தொடங்கினார்கள் இது யாருக்கும் தீங்கு விளைவித்துவிடக்கூடாது என்ற அச்சத்தில் அதிகாரிகள் பின் தொடர்ந்து அது அந்த ஏரியை அடைவதை உறுதி செய்தனர்


**DEVAKI INVESTMENTS**
30, First Main Road, Gandhi Nagar, Adaiyaru,
Madras-20. Phone : 41 59 58

OUR BUSINESS :

- Cheque Discounting
- Short Term Business Loans above 10,000/- on the Mortgage of Madras City Properties
- Accepting Fixed Deposits at 20%

Managing Partner : Mrs. MANIMEKALAI GANESAN, M.A., B.Sc.


FREE E - BOOKS , www.thamizham.net.,



# கவிஞர் இளையராஜா

○ ஒரு பதத்ரிகையில், 'கவிதையை நான் எழுதவில்லை. வேறொருவர் (வைரமுத்து) எழுதித்தர நான் வெளியிடுகிறேன்' என்று எழுதியிருக்கிறார்கள். யார் எழுதினால் என்ன? கருத்து மக்களுக்குச் சேர்ந்தால் சரி. இருப்பினும் பிச்சைக் காரனிடம் பிச்சை வாங்கும் அவசியம் எனக்கில்லை.

○ சினிமாவிற்கு பாட்டெழுதுவது பெரிய காரியமில்லை. யார் வேண்டுமானாலும் எழுதலாம். 'ராசா'ன்னு போட்டா அடுத்த அடியில 'ரோசா'ன்னு போடுவோம். அவ்வளவுதான். அதுனாலதான் ஒரு படத்தின் பாடல் எழுதும் பொறுப்பையும் ஏற்றுள்ளேன்.


---

உலக குழந்தைகளில் நாளொன்றுக்கு 40,000 குழந்தைகள் பட்டினியால் இறக்கின்றன. இதைவிட அதிகமான குழந்தைகள் பிச்சைக்காரர்களைவிடவும் கேவலமாக வாழ்கின்றன. உலக நாடுகள் ஆயுதப் போராட்டங்களுக்காகச் செலவிடும் 200 மில்லியன் டாலர் மூலம் சுமார் 10 ஆண்டுகளில் உலக மக்களின் பசியை எளிதில் போக்கிட முடியும்

## சரியும் ரூபாய் மதிப்பு

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 15.06 காசு | நாக்பூர் | 14.99 |
| டில்லி | 14.45 ,, | ஜெய்ப்பூர் | 15.11 |
| பம்பாய் | 14.12 ,, | கான்பூர் | 15.29 |
| கல்கத்தா | 15.38 ,, | அகமதாபாத் | 15.50 |
| பெங்களூர் | 13.70 ,, | ஸ்ரீநகர் | 13.09 |
| ஐதராபாத் | 14.17 ,, | லபாக் (அசாம்) | 20.12 |

FREE E - BOOKS , www.thamizham.net.,




ஆசிரியர்: க. நாராயணபாரதி. வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன், அண்ணா நகர், (13-வது மெயின் ரோடு) சென்னை-600 040. அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, டாக்டர் நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

## சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும்: "சு
1494, அண்ணாநகர், சென்னை 600

FREE E - BOOKS , www.thamizham.net.,

# எரிகிற வீட்டில்

இராமநாதபுரம் மாவட்டம் தமிழகத்தின் பின் தங்கிய மாவட்டம். பஞ்சம்-வறட்சியால் மக்கள் பாதிக்கப்பட்டு வெளி மாவட்டங்களுக்கும், வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் பிழைக்கப் போகிறார்கள் என்பது அரசுமுதல் அனைவருக்கும் தெரிந்த பரம ரகசியம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசு இவ்வருடம் 'வரிவஜா' செய்திருக்கிறது. பஞ்சம்-வறட்சியைத் தடுக்க, ஒழிக்க விருப்பமில்லாத அரசு கடன் சுமையால் விழி பிதுங்கிக் கொண்டிருக்கும் உழவர்களுக்கு உருப்படியாக எதுவும் செய்யவில்லை. எதிர்கட்சிகளோ தேர்தல் திருவிழாக்களில் புளகாங்கிதப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வரிவஜா செய்ய 100க்கு 25 ரூபாய் வீதம் ரெவின்யூ அதிகாரிகள் விவசாயிகளைக் கொடுமைப்படுத்திக், கசக்கிப் பிழிந்து வருகின்றனர். உதாரணமாக, திருவாடானை வட்டம், மங்கலக்குடிப்பிர்கா, கூகுடிக் குருப்பில் உள்ள கிராம நிர்வாக அதிகாரியும், தலையாரியும் கூட்டுச் சேர்ந்து 25 சதவிகித வசூலில், ஆயிரக்கணக்கில் பணம் சுருட்டிப் பங்கிட்டுள்ளனர். மேலும். கிராம நிர்வாக அதிகாரியும், தலையாரியும் பல வசூல் நடத்திச் சாதனை புரிந்து வருகின்றனர். மேற்படி ரெவின்யூ அலுவலர்கள் இருவரும் பங்குபோட்டு அரநூத்திவயல் கண்மாயில் மரங்களை வெட்டியிருக்கின்றனர்— அது சொந்த உபயோகத்திற்காகவாம்.

"ஏன் வெட்டுகிறீர்கள்" என்று ஒரு விவசாயி கேட்டதற்கு "நாங்கள் யாரைக் கேட்கணும்? வெட்டுவோம். அறுப்போம் அது எங்கள் இஷ்டம். நீ யார் கேட்பதற்கு?" என்று தலையாரியே மிரட்டுகிறார்,

தொடர்ந்து குற்றம் புரிந்துவரும் ரெவின்யூ அலுவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

—நமச்சிவாயம், தேவக்கோட்டை

## பிடுங்கினது ஆதாயம்

FREE E - BOOKS , www.thamizham.net.,




நடிகர் சோ. துக்ளக் சோ. ஜனதா சோ. பல வகை சோக்கள் இருந்தாலும் சோவை மூன்றாக இப்படிப் பிரிக்கலாம். இம்மூன்றிலுமே சோ ஒரு காமெடியன்தான். சோவைவிட கிண்டல் பேர்வழி தமிழ் எழுத்துலகில் இல்லை. சோ நல்ல அனுபவசாலி. சிறந்த படிப்பாளி. இருந்தும்—

அவர் எழுத்துக்களில் அவர் பூசும் நகைச்சுவை சாயம் கருத்துக்களை கனமற்றதாக்கிவிடுகிறது. அரசியல் சிந்தனைகள் கூட நகைச்சுவை துணுக்காகிச் சிதைகிறது. எனவே, எப்போதாவது அவர் சீரியஸாக ஏதாவது கூறினால்கூட அனைவரையும் அலட்சியப்படுத்த வைக்கிறது.

துக்ளக்கில் வெளியாகும் கேள்விபதில் பகுதி அவரது சிரிப்புச்சுவை உணர்வின் உச்சக்கட்டம். ஒவ்வொரு இதழ் கேள்விபதில் பகுதியிலும் ✳ இக்குறிப்பிட்ட கேள்வி ரூ 10 ஐ பரிசாகப் பெறுகிறது. பேப்பர் விலையேற்றத்தால் துக்ளக் விலையேறும். தபால் கார்டு விலையேற்றத்தால் பரிசு பத்திலிருந்து ரூபாய் பதினைந்தாய் ஆகாது.

துக்ளக்கிற்கு கேள்வி கேட்பவர்கள் சோவால் மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள். சோ என்னபதில் கூறுவார் என்பது கேள்வி கேட்பவர்களுக்கு முன்பே தெரிந்துவிடும். இருந்தும் சலிக்காது கேள்வி கேட்கிறார்கள்.

சோ அரசியல் கேள்விகளுக்கு மட்டுமே பெரும்பாலும் பதிலளிக்கிறார். துக்ளக்கில் தலையங்கம், கார்டூன், கட்டுரை போன்றவற்றில் வருகின்ற கருத்துககள் இந்தப்பகுதியிலும் இடம் பெறுகிறது. பதில் கூறுவதில் பல உத்திகளை பயன்படுத்துகிறார் சோ. சிரிப்பை வரவழைக்க உதவும் கேள்வியை தேர்ந்தெடுப்பதில் இவர் வல்லவர்:

FREE E-BOOKS , www.thamizham.net.,

கே: எம் ஜி ஆரையும், கருணாநிதியையும் ஒரே அறையில் பத்து நாட்கள் தங்க வைத்திருந்தால் எப்படி இருக்கும்?

ப: எம். ஜி. ஆர். செவிடாவார். கருணாநிதிக்குப் பைத்தியம் பிடிக்கும். (துக்ளக் 01-01-86)

பல விஷயத்திற்கும் இவர் பதில் கூறினாலும் திராவிட இயக்க எதிர்ப்பு, இந்திராகாங்கிரஸ் எதிர்ப்பு, ஜனதா ஆதரவு, இவைதான் மேலோங்கியிருக்கிறது. சோ பகுத்தறிவுவாதி அல்ல. தலைவர்களுக்காக தீக்குளிக்கிற தொண்டர்களைக் கண்டித்து எழுதுவார். [01-06-85) இது இவரது லாபத்திற்காக திராவிட இயக்கத்தினர் மீது பழியைப் பூசுவதற்காக. மற்றபடி வேறெங்காவது தீக்குளிப்பு சம்பவங்கள், உயிரோடு எரித்தல் போன்றவை நடந்தால் கண்டுகொள்வதில்லை.

சினிமாவும், எழுத்தும் இவருக்கு திருப்தி தரவில்லையாம். (01-01-86), எனவே, திருப்தி இல்லாத வேலையைத் தொடர்ந்து செய்து வருகிறார். இவர் அரசியல் பற்றி தெரிவிக்கும் கருத்துக்கள், அனுமானங்கள் அநேகமாக தவறாகத்தானிருக்கிறது. ஒரு சில முறைதான் சரியாக இருக்கிறது.

கிரிக்கெட் பற்றியும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அதற்கும் அக்கறையோடு பதில் கூறுகிறார் (01-02-86). இது ஏன்? மேல் தட்டு மனோபாவம் உள்ள மாணவர்களை திருப்திப்படுத்தவா? இந்தியை முழுமூச்சாக ஆதரித்து எழுதுவது யாரை திருப்தி படுத்த?

பல இடங்களில் தமிழக அரசின் மீது அதிருப்தியை தெரிவித்து அதன் தீர்வாக ஆட்சி மாற்றம் தேவை என்று கூறுகிறார். ஆட்சி மாற்றம் என்றால் எப்படி? கூறுவதில்லை. பல இடங்களில் எம். ஜி. ஆரைவிடவும் குழப்பங்களின் குத்தகை தாரராக இருக்கிறார்.

கே: 'அடுத்தவனைக் கிண்டலும், கேலியும் செய்ததைத் தவிர இதுவரை 'சோ' எந்த உருப்படியான காரியமும் செய்யவில்லை.' என்று பரவலான கருத்து நிலவுகிறது. இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நாட்டில் நூற்றுக்கணக்கான அரசியல் விமர்சகர்களும், பத்திரிகையாளரும் இருக்கும்போது, என்னைப்பற்றி மட்டும் 'இவன் இன்னமும் எதுவும் உருப்படியாகச் செய்யவில்லை' என்று பலர் சொல்வதிலிருந்து, நான் ஏதோ 'உருப்படியாகச் செய்யக்கூடியவன்' என்ற கருத்து பலருக்கும் இருப்பது புரிகிறது. அந்த மட்டில் திருப்தி. (01.06.85)

சோவுக்கு இந்த திருப்தி போதும்,
நமக்கு...

—கா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சிறுகதை

# சமூக சேவை



"ஆப்பரேஷனை ஒரு பைசா செலவில்லாம, நாங்க நடத்திடறோம். அப்படின்னு. 'டாக்டர்' சொல்லிட்டார். லஷ்மி ஆனா .."

"ஏன் இழுக்கறீங்க?"—லஷ்மி.

"நாம சென்னைக்கு போக, வர, கை செலவுக்கு பணம் வேண்டாமா? குறைஞ்சது ஆயிரம் ரூபாயாவது, வேணுமே"

"ஏன், நம்ம ஊர்ல இருக்கிற, சமூக அமைப்பு, எதிலாவது போய் கேளுங்களேன் .."

அந்த யோசனையை கேட்டு நாராயணன், சமூக சேவகி 'ரமாசேதுமாதவன்' வீட்டிற்கு போனார்.

வாசலில் கூர்க்காவே உள்ளே விடவில்லை.

எப்படியோ, அவனை சமாளித்து உள்ளே போனார்.

உதவியாளர் ஹாலில் அமர சொன்னார்.

உட்கார்ந்தார். சிறிது நேரம் கழித்து ரமாசேதுமாதவன் இறங்கி வந்தாள்.

குட்டை தலைமயிர், லிப்ஸ்டிக், சிவப்பு உடம்பில் ஷிபான் சாரி, கண்களிலே நிறைய போதை, தன்னுடைய, நாற்பது வயதை அழகு சாதனங்களினால், பத்து வயதை குறைத்திருந்தாள்.

"என் மகளுக்கு,- இதயத்திலே 'ஹோல்' இருக்காம். ஆப்பரேஷன் செய்யனுமாம். நானோ, ஹோட்டலில் 'சர்வரா' இருக்கேன். ஏதாவது, உதவி செஞ்சிங்கன்னா... ஆப்பரேஷனை இனாம செய்யறதா டாக்டர் சொல்விட்டார். கை சிலவுக்கு, ஆயிரம் ரூபாய் .."

"தரலாம், நாராயணன். அதுலே ஒரு பிரச்னை..."

"நீங்க வேணுமின்னா, விசாரிச்சிட்டு தாங்கம்மா"

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நான் ஒரு குடிகாரன்

தமிழில் எழுதி, தமிழ் மக்களால் வளர்க்கப்பட்டு, சிறந்த எழுத்தாளன் என்று பெயர் வாங்கி, பரிசுகள் பலபெற்று நல்ல வசதியோடு, நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர் ஜெயகாந்தன். இவர் குமுதத்தில் "நான் ஒரு குடிகாரன்" என்று பெருமையாக எழுதியிருக்கிறார். வளர்ந்த பிறகு ஒரு எழுத்தாளன் எதைச் சொன்னாலும் அது தத்துவமா?

ஐயா, பெரிய பெரிய எழுத்தாளர்களே, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறோம். பேனாவைத் திறப்பதற்கு முன்பாக கொஞ்சம் சமூக ஒழுங்கங்களையும் எண்ணிப் பாருங்கள். நீங்கள் எதை எழுதினாலும் பிரசுரிக்க பெரிய பத்திரிகைகள் காத்துக் கிடக்கின்றன. வறுமையின் விளிம்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள், வெகுஜன பத்திரிகைகள் படிப்பவர்களாகவே உள்ளனர்.

தினமும் சினிமா நடிகை நடிகர்களைப் பற்றி புள்ளி விபரம் சேகரித்து விவாதம் நடத்தும் மூன்றாம் தர குடிமக்கள் நிறைந்தது இந்தச் சமுதாயம். ஐந்து ரூபாய்க்கு இரண்டு மணி நேரம் வரிசையில் நின்று பின்பு சினிமாப் பார்த்து திரும்பும் ஒரு இளைஞனை, அதே ஐந்து ரூபாய்க்கு ஒரு நல்ல புத்தகம் வாங்கிப் படிக்கும்படி மாற்றினால் அவன் ஒரு சக்தி வாய்ந்த எழுத்தாளன். தத்துவம் என்பது வாழும் மனிதனுக்குள் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்! எதை எழுதினாலும் பிரசுரம் ஆகிவிடுகிறதே என்பதற்காக கண்டபடி எழுதுவதை கண்டித்தாக வேண்டும். ●

—பம்மல் ஜெயமுனியன்

தரலாம், அதுலே ஒரு பிரச்சனை?"
என்னம்மா பிரச்சனை?"

"எங்க, லேடீஸ் கிளப்பை, கூட்டணும். தீர்மானம் 'பாஸ்' பண்ணணும். மினிஸ்டர்ட்ட 'டேட்' வாங்கணும். ஏன்னா, அவர், தலைமையிலே தானே, நடக்கிற விழாவிலே, அந்த பணத்தை உங்களுக்கு, நான் தரணும்...?"

—ஆர். வசந்தகுமார்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# நெருப்பை அணைக்கத் தண்ணீரில்லை.

கல்வி நிறுவனங்கள் நடத்துவது பணம் விளைகிற நல்ல வியாபாரம். தொழிற் கல்விக்கு இங்கே ஏக கிராக்கி. எனவே, பாலிடெக்னிக் நடத்தி பலர் பணம் சம்பாதிக்கிறார்கள்! பழனியில் உள்ள மீனாட்சி கிருஷ்ணன் பாலிடெக்னிக் கடந்த மூன்று ஆண்டுகளாக நடந்து வருகிறது. இரு வாரங்களாக மாணவர்கள் அங்கே வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இதனை துண்டு பிரசுரங்கள், போஸ்டர் மூலம் அறிந்து விரைந்தோம்.

தென்னந்தனிமையில், பொட்டல்வெளியில் பாலிடெக்னிக் இருந்தது. அதன் முன்பு கும்பலாக மாணவர்கள் நின்றிருந்தனர். நமது மனக் குமுறல்களை வார்த்தைகளாக்கித் தந்தனர்:

மூன்று ஆண்டுகளாக மாணவர் சங்கத் தேர்தல் நடத்தப்படவில்லை. நிர்வாகம் சரியில்லை. கிளாஸ் போடவில்லை. பஸ் பாஸ் லேட்டாகிறது. விடுதி சரியில்லை. ஓர் அறைக்கு 22 பேர் வீதம் அடைக்கப்படுகிறார்கள். மின்விசிறி, படுக்கை வசதி கிடையாது. வகுப்பறைகள் மாட்டுக்கொட்டகை போல இருக்கின்றன. ஆய்வக வசதிகள் சரியில்லை. இரு கொட்டகை மர்மமான முறையில் தினம் தினம் எரிகின்றது. அதனை அணைப்பதற்குக் கூட தண்ணீ


சுட்டிசந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.


FREE E - BOOKS , www.thamizham.net.,

றில்லை. ( கட்டடத்துக்கு சீர் சீரமாக நிறைய நாற்காலிகள் எரிந்து கருகியிருந்தன.) விருந்தி மெஸ்ஸின் சாப்பாட்டில் பல்லி விழுந்து ஆறுபேர் மயக்கமடைந்து G.H.-ல் சேர்க்கப்பட்டனர். (அந்தப் பல்லி பத்திரமாக மாணவர்களால் ரசாயனக் குடுவையில் பாதுகாக்கப்படுகிறது.

மாணவர்களிடம் நன்கொடை என்கிற பெயரில் கொள்ளையடிக்கப்படுகிறது. மானேஜர் தண்ணி போட்டுவிட்டு வருகிறாராம்.

■ ■ ■

இந்த குறைகளைக் களைய என்ன செய்கிறீர்கள் என்று நிர்வாகத்தினரை சந்திக்க முயன்றோம். இயலவில்லை. ஆசிரியர்களோடுதான் பேசமுடிந்தது. ஆசிரியர்கள் மிகவும் இளைஞர்களாயிருக்கின்றனர். தங்களுக்கு அனுபவம் வேண்டும் என்பதற்காக வேலைக்குச் சேர்ந்திருக்கின்றனரா? இவர்கள் மாணவர்கள் மீது குற்றம் சுமத்துவதிலேயே குறியாயிருந்தனர்.

நிர்வாகத்தினரை கலந்து ஆலோசித்தால் இன்னொரு பக்க நியாய அநியாயம் புலப்படும். எங்கே சந்திக்க முடிகிறது?

■ ஜெக ■ M. செல்வராஜ்.

**அட்டைப் படம்:**

கலைக் கூத்தாடி கூறுகிறார்:

'நானும் என் மகனை உயர்த்திவிட்டேன்!'

FREE E - BOOKS , www.thamizham.net.,

**எழுத்தாளர் மாலன் கூறுகிறார்:**

# மாத நாவலுககு எதிராக இயக்கம்!



**மாலன் நிறைய விஷயங்கள் பற்றி பேசினார். அதிலிருந்து சிலவற்றை வெளியிடுகிறோம். இது காலைக் காலக் காற்றை பலூனுக்குள் அடைக்கிற முயற்சி.**

திசைகள் பத்திரிகை மீண்டும் வருமா?

திசைகள் என்ற பெயரில் வராது. உடனடியான திட்டமோ, தீர்மானமான முடிவோ கிடையாது. அந்த இலட்சியத்தை அடைவதுதான் என் வாழ்க்கையின் முழுமை என்று நினைக்கிறேன்.

இன்றையப் பத்திரிகைகளில் சிறுகதைக்கு தவிர்க்க இயலாத இடம் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தைக் கவிதை எப்போது பிடிக்கும?

கவிதை ஒருபோதும் அந்த இடத்தைப் பிடிக்க முடியாது. கதையால் உலகத்தை வெல்லலாம் என்று கூறுவார்கள். உலகம் முழுவதும் பார்த்தால், எல்லா மதங்களும், அரசியல் கருத்துக்களும் தங்கள் சிந்தனையைப் பரப்ப சிறுகதையைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். கவிதை என்பது வெகுஜன சாதனமாக இருக்க முடியாது. ஏனென்றால் அது எளிமையானது இல்லை. புரிந்து கொள்வதற்கு இலக்கியப் பயிற்சி வேண்டும்.

கவிதையை ஆயுதமாகப் பயன்படுத்த முடியும் என்று நமக்கு நிரூபித்தவர் பாரதியார். பாரதியார் தனது கவிதைகளைப் பாடலாக்கினார். பாடலுக்கு ராக, தாள குறிப்புகள் கூட எழுதினார். பாரதி காலத்திற்கு முன்பு கவிதை என்பது அழகு சார்ந்த விஷயமாக இருந்தது. பாரதிதான் அதை உணர்வு கலந்த விஷயமாக்கினான்...

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஜீன்ஸ்

அமெரிக்காவில் ஜீன்ஸ் உடைகள் மீதான மோகம் குறைத்துவிட்டதாம். குறிப்பாகப் பெண்கள் முரட்டுத்தனமான ஜீன்ஸ் உடைகளை அணிவதில்லையாம். மிருதுவான உடைகளையே விரும்புகிறார்களாம். இதனால் ஜீன்ஸ் விற்பனை பெருமளவில் வீழ்ச்சியடைந்துவிட்டது.

நமது இந்தியாவில்... ஜீன்ஸ்—

பெருகி வருகிறது. இங்கு ஜீன்ஸ் அணிவது அறிவு ஜீவித்தனம், புத்தப்புது நாகரிகம் என்று பலர் கருதுகிறார்கள். இந்தியா போன்ற வெப்ப நாடுகளில் ஜீன்ஸ் அணிவது உடல் நலத்திற்கு தீமை பயக்கும் ஒன்றாகும். நாகரிகம் என்ற போர்வையில் வியாதிகளை வலிய வரவழைத்துக் கொள்வதாகும். 'ஸ்டோன் வாஷ்' என்று ஒரு முரட்டுத் துணி வேறு வந்திருக்கிறது. இது பார்ப்பதற்கே அருவருப்பைத் தருகிறது. விடுதலைப் புலிகள் அணிகிற உடையும் இப்போது புது ஃபாஷன்.

இப்படி இறக்குமதி நாகரிகத்தில் இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் ஏன் இத்தனை மோகம்?

---

அப்படியென்றால் கம்பன் படைப்புகள் உணர்வு விஷயமில்லையா?

கம்பன் ஒரு நாவலாசிரியர், நல்ல story teller. அவ்வளவு தான்.

புதிதாக சிறுகதை எழுதுகிறவர்கள் நாவலைச் சுருக்கி சிறுகதை என்கிறார்கள். பிரபலமானவர்களோ சிறுகதையை நீட்டி மாதநாவல் என்கிறார்கள். இதுபற்றி...

புதிதாக எழுதுகிறவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கை வரவேண்டும். இன்னும் பலநூறு கதைகள் எழுதப்போகிறோம் என்று. இந்த நம்பிக்கை இல்லாத காரணத்தால்தான் ஒரே கதையில் அத்தனை விஷயங்களையும் 'பேக்' பண்ணிவிடுகிறார்கள். மாதநாவலுக்கு எதிராக ஓர் இயக்கம் வரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அல்லது அதற்கு குறைந்தபட்ச கட்டுப்பாடு வரவேண்டும். மலேஷியாவில் யார் வேண்டுமானாலும் பத்திரிகை ஆரம்பித்துவிட முடியாது. வியாபாரத்துக்கு கட்டுப்பாடு உண்டு. மாதநாவல்களை இலக்கியமாகப் பார்க்க

FREE E - BOOKS , www.thamizham.net.,

கூடாது. வியாபாரப் பத்திரிகைகளின் உச்சக்கட்டம் மாத நாவல்கள். கமர்ஸியல் படங்களின் உச்சக்கட்டம் ப்ளூபிலிம் என்கிறோமே, அதைப்போல!

உங்கள் சிறுகதைகள் மொழிபெயர்க்கப்பட்டால் தமிழக வாசகன் அடைகிற அதே உணர்வே மற்ற மொழிக்காரர்களும் பெற இயலுமா?

மொழிப் பெயர்ப்பை பொருத்து இருக்கிறது. பொதுவாக என்னுடைய அனுபவம் வாழுகிற சமூகத்தை அடிப்படையாக வைத்து நான் படைப்பதாலும், அவர்களையே Identify பண்ணுவதாலும் மற்றவர்களும் அதே உணர்வைப் பெற முடியும். எனது 'ஆயுதம் செய்வோம்' இந்தியில் 'சாரிஸ'வில் வெளிவந்தது. அவர்களுக்கு 'ஆயுதம் செய்வோம் என்கிற வரி முற்றிலும் புதிது. அதைப்படித்துவிட்டு பாரதியைப் படித்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள் உண்டு.

இப்போது ஏதேனும் நாவல் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறீர்களா?

இல்லை.

உங்களுக்கு எதில் திருப்தி பத்திரிகையாளனாக இருப்பதிலா? படைப்பாளனாக இருப்பதிலா?

பத்திரிகையாளனாக இருப்பதில்...

சர்வதேச படைப்பை அளிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவனுக்கு நீங்கள் தருகிற ஆலோசனை என்ன?

சர்வதேச ரீதியில் நாம் எங்கிருக்கிறோம் என்று முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். நம்முடைய மொழி மரபுகளையும் புரிந்து கொள்ளவேண்டும். நவீனப் புரிதலும் அவசியம். இதுமட்டும் போதாது. உலக மனிதனுக்குப் பொதுவாகவும் இருக்க வேண்டும். ஜே. ஜே. சில குறிப்புகள் ஒர் உலகப் படைப்பு.

'அக்னி' சிலருக்கு பதவியைப் பெற்றுத்தருகிற ஒரு அமைப்பு என்று ஓர் அபிப்ராயம் உலவி வருகிறதே, அதன் செயலர் என்கிற முறையில்...?

சிவசங்கரியை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள். சிவசங்கரியை நான் நன்கு அறிவேன். அவருடைய ஐந்தாண்டுகளின் படைப்புகளை நான் மதிக்கிறேன். அவருடைய மனிதாபிமானமுள்ள படைப்புகளை நான் விரும்புகிறேன். எனக்குத் தெரியும். பல பதவிகள் அவரை நோக்கி வந்தன. அதனை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. பணம், புகழ் அவருக்கு இனிமேல் தானா கிடைக்கப்போகிறது?

பேட்டி : நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

அரசு விழாக்களில்
சிங்களத் தீவுக்கோர்
பாலமமைப்போம்
—என்று
அமைச்சர்கள் கூற
ஆளும் கட்சிக்
காண்டிராக்டர்கள்
அலைந்தார்கள்
"அந்தக் காண்டிராகடும்
நமக்கே கிடைககாதா?"
—என்று

—வண்ணை வளவன்
(வெய்யில் காற்றுகளில

ஓ
தமிழனே...
நீ
முன்னேறி கொண்டுதான்
இருக்கிறாய் —
சினிமா தியேட்டர்
க்யூக்களில்...

—இரா. செல்வகுமார்

ஓா ஏழை
ஏப்பம் விடுகிறான்
நேற்றிரவு
கனவில் சாப்பிட்ட
ரொட்டித் துண்டுக்கு!

—கோ. வசந்தகுமார்

மிலாட்!
வாதம் புரிய
வக்கில்
கையை உயர்த்தினார்!
அவர்
கறுப்புக்கோட்டு
கைதியின் முகத்தை
நீதிக்கு
மறைத்தது!

—மதுபாலிகா

FREE E - BOOKS , www.thamizham.net.,

ஆட 15 40-வது

* சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ் நாட்டின் ஐயாயிரம் கோயில்களில் சமபந்தி நடைபெற்றது. 10 லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

* பெ... கலகமேற்படுத்த தீவிர வாதிகள் ...தி. பலத்த போ...ல். செங்கோட்டையில் ...ராஜீவ் கொடியே...ற்றினா... ...பாக்கித் துளைக்க முடியாத கண்ணாடி அறை...லி... ...பேசினார்.

* பஞ்சாப் ...வந்தர் நகரில் உள்ள நேரு பூங்காவில் காந்தி சிலை ...ர்பூசிய நிலையில் காணப்பட்டது. சிலையின்மீது காலிஸ்தான் கொடியும் பறந்து கொண்டிருந்தது.

* நூறு கிலோ பருப்பில் 35 கிலோ மணல் கலக்கப்பட்டிருந்ததை அதிகாரிகள் ...டுபிடி... திருவள்ளூரை அடுத்த புன்னப்பாக்கத்தில் ...ள ...ப்பள்ளி சத்துணவுக் கூடத்தில் இந்தக் க...டம் க...க்கப்பட்டது

* சென்னை திரு...லிக்கே... சாலையில் நின்று கொண்டு பெண்களை ...லி செய்தத... ...றுபேர் போலீசாரால் கைது செய்யப்பட்...

* வாடகைபாக்கி... தொ... ...ஜெயராம் என்பவர் முனுசாமியைத் தாக்கி பல்லை உடைத்துவிட்டார். கோர்ட் அவருக்கு ரூ 250 அபராதம் விதித்திருக்கிறது.

* கள்ளக் காதலில் ஈடுபட்ட மனைவியை கத்தியால் குத்தி கொன்ற கணவர் பெரம்பூர் போலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

* நெல்லை ...னில் ...ள்ள ... கோயிலில் எம். ஜி. ஆர் ...த அர்ச்ச... ...ர் அமைச்சர் ஆர். எம். வீரப்ப...

* கோதாவரி நதியில் வெள்ளம். படகு மூழ்கி 30 பேர் பலி.

* அமைந்தகரையில் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதற்காக முதல் மனைவியை தீயிட்டுக் கொளுத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் ஜோதி என்பவரை போலீஸார் விசாரித்தனர்.

* நெல்லையில் சின்னம் அமைப்பதில் சிக்கல். சங்கு கட்சி ஆலோசனைக் கூட்டத்தில் அ.தி.மு.க.— தி.மு.க. மோதல்.

* ஆகஸ்ட் 15 காலை 8 மணி. சென்னை கோட்டையில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். தேசியக் கொடியை ஏற்றினார்.

—பத்திரிகை செய்திகளில் சில.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கேள்வி: சுட்டி
# பதில்: சுந்தர ராமசாமி

● கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் நம்மிடமிருந்து எந்த விதத்தில் வித்தியாசப்படுகிறார்கள்?

மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ் ஆகிய இடங்களில் தமிழர் வாழ்வைச் சிறிது கவனிக்கும் குறுகிய கால சந்தர்ப்பத்தையே நான் பெற்றிருக்கிறேன். அங்கும் நம்மவர்கள், இங்கு போலவே, நிகழ் காலத்தில் வாழாமல், கடந்த காலத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் இனத்தின் ஆகப் பெரிய குறை இதுதான்.

கடந்த காலப் பெருமைகளைப் பாராட்டும் குணம் இயற்கையாகவே, எல்லா இனங்களும் கொண்டிருக்கின்றன. இது அவசியம். மரபில் வலுவான வேர்களை உணரும்போது, ஒரு இனம் வாழ்வின் மீது பற்றும் நம்பிக்கையும் கொள்கிறது. நிகழ்காலத்தில் வேர் விட்டபடி கடந்த காலத்தைத் திரும்பிப் பார்ப்பது ஒன்று; நிகழ்காலம் பற்றிய பிரக்ஞை அற்று, கடந்த காலத்தோடு அறிவு ரீதியான அணுகலும் அற்று, கடந்த காலத்தை கனவு ரீதியாகக் கண்டு அதன் போதையில் முடங்கி கிடப்பது மற்றொன்று. வாழும் காலத்திற்குரிய பிரக்ஞையோடு வாழ்வதும், அந்தக் காலத்துக்குரிய தயாரிப்புக்களில் ஈடுபடுவதும், சவால்களை எதிர்கொள்வதும், உலகத் தரத்தை எட்டத் துடிப்பதும் ஒரு இனத்தின் முன்னேற்றத்திற்கு அவசியமான குணங்கள் ஆகும். 20ஆம் நூற்றாண்டுக்கு மட்டுமே உரித்தான உன்னதங்களையும் சிகரங்களையும், கலைகளிலோ, இலக்கியத்திலோ, தத்துவத்திலோ, விஞ்ஞானத்திலோ அறியாது இங்கு நம் தமிழர்கள் வாழ்வது போலவே கடல் கடந்த இடங்களிலும் இவற்றை அறிவதற்கான வாய்ப்பு அங்கு

FREE E - BOOKS , www.thamizham.net.,

அதிகம் இருந்துங்கூட நம்மவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இங்கு போலவே அங்கும் நம் தமிழர்கள் சீரழிந்த அரசியல், மேலோட்டமான வெகுஜனப் பத்திரிகைகள், ஆபாசமான சினிமா இவை நிரம்பிக் கிடக்கும் மன உலகங்களின் கனவுகளில் மூழ்கிக் கிடக்கிறார்கள். இவை மூன்றுமே அழுகிப் போய்விட்ட சென்ற காலக் கனவுகளை மக்களுக்கு அளித்து, இன்றைய நிதர்சனத்துக்கும் அவர்களுக்குமான உறவை துண்டித்துக் கொண்டிருப்பவை ஆகும். இங்கு தமிழனுடைய அசட்டுக் கிளுகிளுப்பு எம் ஜி.ஆர், பாக்கியராஜ், பாலச்சந்தர், குமுதம் வகையறாக்களைச் சார்ந்து கும்மியடித்துக் கொண்டிருப்பது போலவே, அயல்நாட்டுத் தமிழனின் கிளுகிளுப்பும் இந்தச் சீரழிந்த சக்திகளைச் சார்ந்தே கும்மியடித்துக கொண்டு இருக்கிறது.

இந்திய, உலக உன்னதங்களை (கலை, இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில்) அறிய அயல்நாட்டு தமிழனுக்கு அதிக வாய்ப்பு இருந்துங்கூட, அவற்றை எல்லாம் உதறி விட்டு, அவன் உறைந்து கிடக்கும் இடங்களிலுள்ள பிற இனங்களிலிருந்தோ கலாச்சாரத்திலிருந்தோ எவ்வித பாதிப்பும் பெறாமல், தமிழ்ப் பண்பாட்டை கடல் கடந்த இடங்களிலும் மிகக் கெட்டிக்காரத்தனமாகக் காப்பாற்றிக் கொண்டிருப்பதான பெருமையில், குங்குமப் பொட்டு, விபூதிப் பூச்சு, மாக்கோலம், பொங்கல், தீபாவளி, மதத்தை விற்றுக் கொண்டிருக்கும் சாமியார்களின் உபதேசங்கள் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் நம் தமிழர்கள்.

எம்.ஜி.ஆரின் சினிமாப் படங்களில் ஆழ்ந்த தத்துவப் பிரச்சினைகள் உள்ளன என்றும், சாண்டில்யனும், லக்ஷ்மியும் தலையாய இலக்கியவாதிகள் என்றும் ஒரு தமிழ்ப் பேராசிரியர் புலம்பியதை ஐந்து வருடங்களுக்கு முன் மதுரையில் கேட்டேன். அதே புலம்பலை பாரிஸிலும் கேட்டேன்.

கடல் கடந்த இடங்களில் தமிழர்களைப் பார்த்தது கிணற்று தவளைகளின் குஞ்சுகளை கிணற்றுக்குள்ளேயே பார்ப்பது போல் தான் இருந்தது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

**வேல் டைப் பௌண்டரி**

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, கட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 27087

வீடுகள் காலனி அமைப்பில் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து கட்டித் தரப்படும்.

தொடர்பு— ரேணுகாதேவி
24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம்,
அம்பத்தூர், சென்னை-600 053.

With the best compliments from :

**GANAPATHY ENTERPRISES**

HIRE PURCHASE FINANCIERS

18, Kallukaran Street, Mylapore, MADRAS-600 004.
Phone : 76525

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டி

## முன் இதழ்கள்

இதழுக்கு 45 காசு விதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் 28, 30, 54 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50வது இதழ் 0·75 காசு

# எமக்கு வந்தவை

**ஈழப் போராளிகளின் சிந்தனைக்கு:** (1-00) எரிதழல்

**பண்பாடும் புரட்சியும்:** (7-00) எரிதழல்

**சூரியக் குளியல்:** கவிதைகள் (4-00) சூர்யதேவி

**இதனால் யாவருக்கும்:** கவிதைகள் (3-00) இரவிக்குமார்

**நாட்டுப் புறவியல்—ஒரு விளக்கம்:** (4-00) டாக்டர் கோ. கேசவன், மேற்கண்ட நூல்களும் கிடைக்குமிடம்:- சிவிக்குயில், 20, கோதண்டபாணித் தெரு, கும்பகோணம்-612 001.

**குறள் மணம்:** மாத இதழ் புலவர். செ. வரதராசன், முகவரி :- 82, காந்தி சாலை, கள்ளக்குறிச்சி-606 202, தெ. ஆ. மா. விலை :- தனியிதழ் ரூ. 1-25 ஆண்டுக்கு ரூ. 15-00

**தீர்ப்பு:** தமிழக கிராமிய தொழிலாளர் விவசாய கூலிகள் இயக்க வெளியீடு ஆசிரியர் : S. ஜெயராஜ். முகவரி :- 5/1, பாட்டைத் தெரு, வேலப்பாடி, வேலூர்-632 001. விலை :- தனியிதழ் ரூ. 1-00

**வசந்தங்கள்:** சிறு கவிதைத் தொகுப்பு ஆசிரியர் :- சி. செல்வராஜ். முகவரி :- திருத்தாந்தோணி ரோடு கடைசி, இந்திரா நகர், உறையூர், திருச்சி-3.

**கவிதா:** விமர்சன நூல் (10-00) இளவேனில்

**கலீல் கிப்ரான் கவிதைகள்:** (8-00) என். ஆர். தாசன்

**நைவேத்யம்:** நாவல் (18-00) பூமணி, மேற்கண்ட மூன்றும் வெளியீடு :- சனாபுக் ஹவுஸ், 158, சிங்கண்ணத் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

**புதிய கல்விக் கொள்கை—ஒரு மேல்சாதி பயவஞ்சகம்:** (1-00) முனைவர் சாலை, இளந்திரையன் அறிவியக்கப் பேரவை, ஜி. எஸ். டி. சாலை, ரட்டேரி, வண்டலூர், சென்னை-600 048.

**சிறந்தது ஆத்திகமா? நாத்திகமா?:** (12-00) அமர்சந்த D. காந்தி முகவரி :- 23. லாங்லி ரோடு, சேலம்-636 002.

**திசை:** குடும்ப தமிழ் மாத இதழ்—ஆசிரியர் :- V யோகனாமி முகவரி :- 8, அம்மன் கோவில் தெரு, சென்னை-600 028. விலை :- தனிப்பிரதி ரூ. 1-00—ஆண்டு சந்தா ரூ. 10-00

**இயற்கையில் அறிவியல்:** (12-00) சீனிவாசன் M/s அல்லயன்ஸ் கம்பெனி, த. பெ. எண். 617, மயிலாப்பூர், சென்னை-600 004.

**அற்ப வியாதியும் அனுபவ சிகிச்சையும்:** (6-00) எஸ். ஏ. துரைராஜா M/s ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

**புறா வளர்த்தல்:** (9-00) டாக்டர் எம். வி. மணி, M/s அருணோதயம், 3, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை-600 014.

**ஒரு இந்தியக் கனவு:** நாடகம் (6-00) கோமல்சுவாமி நாதன்-மயிலவன் பதிப்பகம், 17, கங்கையம்மன் கோயில் தெரு, சென்னை-600 026.

**இறைவைப் பயிருக்கு பயிர் பாதுகாப்பு:** (5-00) அரு. சோலையப்பன் M/s புத்தகப் பூங்கா, 29, நல்லதம்பி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

**கைவிளக்கு:** மாத இதழ்—பால குருகுலம் எஸ். சி. சிவ-ராஜு மணி

**விழா மலர்:** ஆசிரியர் : புதுவை சொ. அண்ணாமலை முகவரி : பூதப்பாண்டி, குமரி மாவட்டம் விலை ரூ 3

**நேதாஜி காவியம்:** (25-00) வாய்மை நாதன் இலக்கிய வட்டம், வாய்மைமேடு-614 714 வேதை வட்டம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மெரீனா முதல் குமரி வரை
# மீனவர்கள்
## 7

இராமன் போட்ட கோட்டைக் கூட, சீதைத் தாண்டி விட்டாள் எனறு இராமாயணம் கூறும். ஆனால் இந்திய நாட்டின் வறுமைக் கோட்டை, இன்னும் நம் ஏழை மக்களால் தாண்ட முடியவில்லை. அதிலும், மீனவர்களின் வறுமைக் கோடு, காலங்காலமாய் அப்படியே பதிந்து கிடக்கிறது.

ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னால், சென்னை நகரின் பல்வேறு தொழிலாளர்களின் குடும்ப நிதிநிலை பற்றிய கணக் கொன்று. (Report on an engineering into the family budgets of industrial workers in Madras city, 1938, P-54) மீடித் தொழிலாளர்களைக் காட்டிலும், துறைமுகத்தில் வேலை பார்க்கும் கூலித் தொழிலாளர்களைக் காட்டிலும், மீனவர்களின் வருமானம் குறைவானது என்று கூறுகிறது.

வருடத்தில் ஆறு மாதம் மட்டுமே மீன் பிடி தொழிலுக்கு உரிய காலம் (season) என்று கூறுகின்றனர். ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை தொழில் மந்தமாகத்தான் நடைபெறுகிறது. முன் ஆறு மாதங்களிலும் கூட, மே முதல் ஜூலை வரை, மூன்று மாதங்கள் தான் நிறைய மீன் கிடைக்கும் காலம். இந்த மூன்று மாத வருவாயைச் சேமித்து வைப்பவர்கள் மட்டுமே, வருடம் முழுவதும் ஓரளவு சமாளிக்க முடியும். உ5

அந்த மூன்று மாதங்களிலும் கூட, இவர்களின் உழைப்புக் கேற்ற ஊதியம் கிடைப்பதில்லை. உழைக்கும் நேரத்திற்கேற்ற ஊதியமும் கிடைப்பதில்லை. கொண்டுவரும் மீன்களின் அளவை பொறுத்தே, அவர்கள் ஊதியம் பெறுகின்றனர். ‘பெருவலை’ யில் மீன் பிடித்து வருவோர், 16இல் 1 பங்கு தள்ளுவாணை (தள்ளுபடி) போக, மீதமிருக்கும் மீன்களில் பாதியை எடுத்துக் கொள்ளலாம்; மீதியைப் படகின் உரிமையாளருக்குக் கொடுத்து விடவேண்டும். ‘மதவலை’யில் மீன்பிடித்து வருபவரோ, 5இல்

FREE E - BOOKS , www.thamizham.net.,

1 பங்கு தள்ளுவாளை செய்துவிட்டு, மீதமுள்ள மீன்களைப் பாதி பாதியாய்ப் பிரித்துக் கொள்ள வேண்டும். இப்படி உழைப்பில் பாதி சுரண்டப்படுகிறது.

மார்சல் ஹெருபல் என்பவர், ஐரோப்பாவிலும் இத்தகைய சுரண்டல் நடைபெறுவதைத் தன் நூலில் குறிக்கின்றார். ("Sea Fisheies" P.P 246 & 47).

மீன்பிடிக்கப் போகாத மழைக் காலங்களில், வலைபின்னியும், கூடை பின்னியும் வருமானம் தேட முயல்கின்றனர். எனினும் இவற்றில் கிடைக்கும் வருமானம் மிகக் குறைவானதாகவே உள்ளது. இவர்களில் மிகப்பலர், வேறு எத்தொழிலும் அறியாதவர்களாகவே உள்ளனர். ஆதலால், தொழில் மந்தமான காலங்களில், சிகரெட், பீடி சகிதம் சீட்டு விளையாடிக் கொண்டிருக்கும் பலரைக் காண முடிகிறது. வாழ்க்கையின் நாகரிகம், பண்பாடுகளைப் பொருளாதாரமே நிர்ணயிக்கிறது என்பதை இந்நிலை காட்டுகிறது.

வருடத்தில் பாதி நாள் வேலையின்மையாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தாலும் முறையான தொழிற்சங்கம் போன்ற அமைப்புக்கள் இல்லமையாலும், இவர்களின் வறுமை எப்போதும் இவர்களை நிழலாய்த் தொடர்கிறது.

இவர்களின் வருமானத்தைப் பாதிக்கும் இன்னொரு முக்கியமான காரணமும் ஒன்று உண்டு.

—சுப. வீரபாண்டியன்

(அடுத்த இதழில் முடியும்)




சென்னையில் சில பேருந்துகளில் நாம் போக வேண்டிய இடத்திற்கு 50 பைசா டிக்கெட் என்றால் 50 பைசா டிக்கெட் இல்லை என்று கூறி 60 பைசா டிக்கெட் தருகின்றனர். 50 பைசா டிக்கெட் இல்லையேல் 40 பைசா சீட்டு தந்துவிட்டு செக்கர் வந்தா கண்டக்டர் சமாளிக்க வேண்டியது தானே? நாம் ஐந்து பைசா குறைகிறது என்று கூறினால் இறக்கி விட்டு விடுகிறார்களே! பஸ்ஸில் ஏறும்போது டிக்கெட் கட்டுகள் சரியாக எல்லாம் இருக்கிறதா? என்று பார்ப்பதைத் தவிர வேறு என்ன வேலை இருக்கிறது...?

குமுறியவர் : இராஜாதி, வண்டலூர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## அரசின் சூதாட்டம்

வெளி நாட்டிலிருந்து வரும் சுற்றுலா பயணிகளை கவருவதற்காக இந்தியாவில் குறிப்பிட்ட சில இடங்களில் சூதாட்ட விடுதிகள் (காசினோ) அமைப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. பம்பாய், கோவா நகரங்களில் இருந்து இது பற்றி அரசுக்கு யோசனைகள் வந்துள்ளன. வெளிநாட்டினர் மட்டுமே இதில் அனுமதிக்கப்படுவதுடன், அவர்கள் உடனடியாக பணத்தை செலுத்தவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

## ரஷ்யா சீனாவில் லஞ்சம்

சீனாவின் தெற்கு பகுதியில் உள்ள 'சென்கென்' நகரில் சுற்றுலா நிலையத்தின் துணை மானேஜராக இருந்த 'ஹு-சாங்குய்' (வயது 46) என்பவர் லஞ்சம் வாங்கியதாக வழக்கு தொடரப்பட்டது. அவருக்கு கோர்ட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ரஷியாவில் லஞ்சம் வாங்குபவர்களுக்கு மரண தண்டனை வரை விதிக்க வகை செய்யும் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு உள்ளது.


## மத்திய பிரதேசத்தில் மட்டுமா?

மத்தியபிரதேச மாநிலம் ரட்லம் மாவட்டத்தில் 'பிச்சுர்யா' என்ற கிராமத்தில் ஒரு கிணற்று தண்ணீரை குடித்த 9 பேர் செத்தார்கள்.

அந்தக் கிணற்று நீர் நீண்ட நாட்களாக தேங்கிக் கிடந்து விஷத்தன்மை வாய்ந்ததாக மாறி விட்டதாக அதிகாரிகள் கூறினார்கள்.

மேலும் ஏராளமானவர்கள் அந்த கிணற்று நீரால் பாதிக்கப்பட்டு உள்ளனர். கிணற்றை மூடி விட அரசு உத்தரவிட்டு உள்ளது.

FREE E-BOOKS , www.thamizham.net.,



# இலங்கை இளைஞர்கள்

போதை பொருள் கடத்தல்.

முன்னணியில் இலங்கை இளைஞர்கள்.

முன்னணி இயக்கங்கள் தலைமையேற்று நடத்துகின்றன.

மேற்கண்ட பத்திரிகை செய்திகள் அதிர்ச்சியைத் தருகின்றன அல்லவா? 'நமது இலட்சியம் விடுதலை. அடைவோம் சோசலிச தமிழ் ஈழம்.' என்று சொன்ன முன்னணி இயக்கங்கள் இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகின்றன என்று சொன்னால், அவர்கள் கூறிய சோசலிச தமிழ் ஈழம் என்பது வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

'விடுதலைப் போராட்டத்திற்கு நிதி உதவி தேவை. எனவே நாங்கள் கடத்தலை ஊக்குவிக்கிறோம்' என்று இயக்கத்தினர் சமாதானம் கூறுகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஒரு பெண், "நாளை கல்யாணமாகி பத்தினியாக நான் வாழ வேண்டும். எனவே இப்போது விபச்சாரத்தில் ஈடுபடுகிறேன்." என்று கூறுவது மாதிரி இருக்கிறது.

இயக்கத்தினர் விடுதலை என்று சொல்லிக் கொண்டு எந்த நாடும் (விபச்சாரத்தை அனுமதிக்கும் நாடுகள் கூட) அனுமதிக்காத மனித குலத்துக்கே தீங்கு விளைவிக்கும் செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துகிறார்கள். விடுதலை என்பது நீதி, நேர்மை, தியாகம் போன்ற உயர்ந்த வழிகளால் பெற வேண்டியது. குறுக்கு வழியில் பெறுகிற விடுதலை விடுதலையே அல்ல.

அகிம்ஸா நெறியான புத்தமதக் கோட்பாட்டை உச்சரித்துக் கொண்டு இலங்கை ஜெயவர்த்தனா அரசு காட்டுமிராண்டி தர்பார் நடத்துகிறதே , அதேபோல விடுதலையை உச்சரித்துக் கொண்டு இயக்கத்தினர் போதைப் பொருள் கடத்தல் போன்ற தீய வழிகளில் ஈடுபடுவது எந்த விதத்தில் நியாயம்?

—வி. தயானன் (ஈழம்).

FREE E - BOOKS , www.thamizham.net.,

கட்டி இலவசம்: கட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

கட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில கட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் கட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

## போதை வஸ்து கடத்தலில்இரு இலங்கையர்

சுவிற்சலாந்து பொலிஸாரால் ஜெனிவாவில் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜையின் வாக்கு மூலத்தின் பிரகாரம் தென் மேற்கு பிரான்சில் சிறிலங்காவைச் சேர்ந்த இரு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். கடந்த நவம்பர் மாதம் 26ம் திகதி ஜெனிவா விமான நிலயத்தில் சாந்தி நல்லசாமி என்ற 30 வயது பெண் மணி கைது செய்யப்பட்டார். இவர் பிரயாணத்திற்கு உபயோகித்த பொதிகைப் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3.1 கிலோ கிராம் ஹிரோயின் கைப்பற்றப்பட்டது. பின்னர் இவர் விடுதலை செய்யப்பட்டார். இவரைப் பின் தொடர்ந்த பொலிஸார் போர் டெயல் என்னும் பகுதியில் இவருடன் தொடர்பு கொண்ட இரு ஸ்ரீலங்காவைச் சார்ந்தவர்களை பிரான்சு பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் தர்மன் ராஜரட்ணம் மத்திரூ வயது 29, செல்லியா சுருஸ் நியூமன், வயது 29, ஆகியோராகும்.

நியூஸ்'டுடே - மார்கழி 5

FREE E - BOOKS , www.thamizham.net.,

இந்தியத் தலைநகரில் மக்கள் தொகை பயங்கரமாகப் பெருகி வருகிறது. கி.பி 2001-ல் டெல்லி மக்கள் தொகை 150 லட்சமாக பெருகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981ல் 62.2 லட்சம் பேர் வசித்தனர்.

இவ்வளவு மக்கள் தொகைப் பெருக்கம் ஏன்?

ஆண்டு ஒன்றுக்கு அண்டை மாநிலங்களிலிருந்து 3 லட்சம் பேர் வேலைத் தேடி வருகின்றனர். உ.பி., அரியானா, பஞ்சாப் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து தினக்கூலிக்கு வரும் நபர்கள் அதிகமாயிருக்கிறது. 1982ஆம் ஆண்டில் ஆசிய விளையாட்டுப்போட்டிகள் நடந்தபோது வந்த கட்டிடத் தொழி-லாளர்கள் 10 லடசம் பேரில் பலர் தங்கி விட்டனர். தற்போது ஒரு சதுர மைல் பரப்பிற்கு 10 ஆயிரம்பேர் வசிக்கின்றனர்.

நகருக்கு ஒரு நாளைக்கு 472 மில்லியன் காலன் தண்ணீர் தேவை. ஆனால் இப்போது 377 மில்லியன் காலன் தண்ணீரே கிடைக்கிறது. அதிலும் குழாய் ஒட்டைக் காரணமாக 20 சதவீதம் வீணாகிறது. 2000ஆம் ஆண்டில் தண்ணீர்த் தேவை: 1024 மில்லியன் காலன்.




இதே போல மின்சாரத்தேவை தற்போது 750 மெகாவாட். கி.பி 2001ல் 2568 மெகாவாட். நகரில் 2 லட்சம் டெலிபோன் இணைப்புகள் உள்ளன. இதுவோ 2001ல் ஆறு மடங்காக உயரும். டெல்லி ஆஸ்பத்திரிகளில் 14,000 ஆக இருக்கும் படுக்கைகள் வரும் நூற்றாண்டுத் தொடக்கத்தில் 61 ஆயிரமாக தேவைப்படும்.

பாக்தாத், லாகூருக்கு அடுத்தபடியாக சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்ட 3வது நகர் டெல்லிதான். எல்லாவற்றிற்கும் மேலாக தீவிரவாதிகள், கடத்தல்காரர்களால் அடிக்கடி சீரழிக்கப்படுகிறது.

மக்கள் தொகையை குறைக்க முடியுமா? "முடியாது" என்கிறார் நகர்ப்புற ஜனப்பெருக்க தேசிய கழக நிபுணர் ஓம்பிரகாஷ்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

○ கவிதைகள் அனைத்தும் நன்றாக உள்ளது. 'தீப்பெட்டி' கவிதை திசைகள் இதழில் ஏற்கெனவே வந்துவிட்டதே. சுந்தர ராமசாமி உண்மையைத் தொடுகிறார். கவிஞர் மு. மேத்தாவின் பேட்டி அருமை. ஆனால், அவரது நிலை சமீப காலத்தில் மாறுபட்டிருப்பது வேதனைக்குரியது.

—எஸ். ரவீந்திரன், திருராமேஸ்வரம்.

○ வட்டியும் முதலுமாய் இரண்டு பக்கத்தில் பன்னிரண்டு கவிதைகளா?

—கல்லாலம், மு. இளவரசு.

○ கவிஞர் மு. மேத்தாவின் பேட்டி அருமையான-வித்தியாசமான பேட்டி. தனக்கு அரசியல் பார்வை உண்டு; பின்னணி கிடையாது என அடித்துக் கூறிய அவரைப் பாராட்ட வேண்டும்.

—மு. கி. பிரேம்குமார், வில்லாபுரம்.

○ முதல்வர் தன்னுடைய மன்ற மறவர்களை கத்தி வைத்துக் கொள்ளத்தான் சொன்னாரே தவிர, யாரையும் கொலை செய்யச் சொல்லவில்லை.

—A. பழனிசாமி, பொத்தனூர்.638 181.

○ இந்நாட்டு 'மன்னரின்' ராஜபோக வாழ்க்கையை வெளிச்சம் போட்டுக் காட்டி மனதில் வலியை ஏற்படுத்தியது மருத்துவம் சிறுகதை. (சு)தந்திரம் கார்டூனல்ல—கவிதை!

—எம். பஷீர், ஹைதராபாத்.



○ மெரீனா மீனவர்கள் கட்டுரையின் போக்கு நன்று. தொடரட்டும்!

—ஊ. பரமசிவன், சித்தூர், பாலக்காடு.

○ அரசு பதில்கள் பற்றிய விமர்சனம் மிகச்சரியான முறையில் தரம் பார்த்து எழுதப்பட்டுள்ளது. தொடர்ந்து சாவி பதில்கள், ரசிகன் பதில்கள், பைரவி பதில்கள் குறித்தும் வருமா?

—திருமதி. சுகுணா மதுரை மூர்த்தி, மதுரை-1.

FREE E - BOOKS , www.thamizham.net.,

[illegible] I    Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment    Licence No. TN/MS(N)WPP-[illegible]

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)





# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiary sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District



FREE E - BOOKS , www.thamizham.net.,